[2010 ஏப்ரல் 27

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தந்தத் துறை அமைச்சரிடம் இந்தக் கேள்விகளைக் கேட்டு, பதிலைப் பெறலாம். என்னிடத்திலே பெற வாய்ப்பில்லை. திருவண்ணாமலை மாவட்டத்திலே இப்பொழுது நடமாடும் மண் ஆய்வுக் கூடம் ஒன்று இருக்கிறது; மாவட்டம் முழுவதும் ஆய்வு செய்கின்ற வாய்ப்பு இருக்கக்கூடிய காரணத்தினாலே, தனியாகப் போளூரில் ஒரு மண் ஆய்வுக் கூடம் அமைக்க வாய்ப்பில்லை.

முற்பகல் *9—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் *102*, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன்மூர்த்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**102—**

**கலைக் கல்லூரி**

***33591—திரு. மு. ஜெகன்மூர்த்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணத்தில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரக்கோணத்தில் அரசுக் கலைக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெகன்மூர்த்தி, அவையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே மிகுந்த மக்கள் தொகைக் கொண்ட நகரம் அரக்கோணம். அரக்கோணம் எங்களுடைய பள்ளிப்பட்டு தொகுதிக்கும் மிக நெருங்கிய தொடர்புடையது

2010 ஏப்ரல் 27]

மட்டுமல்ல; இப்போது இருக்கின்ற பாராளுமன்றத் தொகுதியில் கூட அது அடங்கியது என்ற வகையிலே அரக்கோணத்திலே மேற்படி கலை அறிவியல் கல்லூரி அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் அடங்கியுள்ள வேலூர் மாவட்டத்தில் 3 அரசினர் கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. முத்துரங்கம் அரசுக் கலைக் கல்லூரி, வேலூர், அரசு திருமகள் ஆலைக் கல்லூரி, குடியாத்தம், அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, வாலாஜாபேட்டை என 3 அரசு கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல் இப்போது திருப்பத்தூரிலே ஒரு அரசுக் கலைக் கல்லூரியைக் கொடுப்பதாகவும் அரசு சொல்லியிருக்கிறது. ஆகவே, அதிகமாக நான்கு அரசுக் கலைக் கல்லூரிகள் ஒரு மாவட்டத்திலே இருப்பது மிகப் பெரிய விஷயம். மேலும், 8 அரசு உதவி பெறும் கல்லூரிகளும் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் அந்த மாவட்டத்திலே 15 சுய உதவிக் கல்லூரிகளும் இருக்கின்றன. ஆக, இப்போது 26 கலைக் கல்லூரிகள் வேலூர் மாவட்டத்தில் இருக்கின்ற காரணத்தினால், இப்போது இந்தக் கோரிக்கையை உடனடியாக ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், substitute-க்கு supplementary கிடையாது. உட்காருங்கள்.

வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**103—**

## பணிமனை

***57525—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—